செ.வெ.எண்:69 நாள்:25.08.2021

## நாமக்கல் மாவட்டம்

## வெண்ணந்தூர் அரசு மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

***

நாமக்கல் மாவட்டம், வெண்ணந்தூர் அரசு மருத்துவமனையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் இன்று (25.08.2021) ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக, மருத்துவமனையில் பிரசவ அறை, தடுப்பூசி போடும் அறை, அறுவை சிகிச்சை அரங்கம், மருந்து கிடங்கு, அவசர சிகிச்சை பிரிவு, தொற்ற நோய் பிரிவு, பல்மருத்துவ பிரிவு மற்றும் சித்த மருத்துவ ஆகிய பிரிவுகளை ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், கணினியில் பதிவு செய்யப்பட்டுள்ள மருந்துகளின் இருப்புக்கணக்கு, ஆய்வக உபகரணங்கள், வேதிப்பொருட்களின் இருப்பு கணக்குகள் மற்றும் பரமாரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை ஆய்வு செய்து பணிக்கு வந்துள்ளவர்களை ஒப்பீடு செய்து ஆய்வு மேற்கொண்டார்.

உள்நோயாளிகள் பிரிவிற்கு சென்று நோயளிகளின் நலம் விசாரித்து, அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மேலும் மருத்துவமனையில் அமைந்துள்ள சமையற்கூடத்திற்கு சென்று உள்நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவை உட்கொண்டு அதன் தரத்தினை ஆய்வு செய்தார்.

அதனைத்தொடர்ந்து, சித்த மருத்துவப்பிரிவில் பரமாரிக்கப்படும் மருத்துவ மூலிகை தோட்டத்தினை பார்வையிட்டார். மேலும் மருத்துவமனையின் சுற்றுப்புற வாளாகத்தையும் அதன் தூய்மையையும் பார்வையிட்டு, மருத்துவமனையில் உள்ள புற மற்றும் உள் நோயளிகளுக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ள அடிப்படை வசதிகள் குறித்து மருத்தவர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது, வெண்ணந்தூர் தலைமை மருத்துவ அலுவலர் மரு.மு.மனோகரன், உதவி மருத்துவர்கள் மரு.ஆர்.செந்தில் குமார், மரு.ஸ்ரீதேவி, மரு.ஆசைதம்பி, மரு.மேகலா மற்றும் செவிலியர்கள், மருந்தாளுநர்கள், மருத்துவமனை பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.